திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, திருமண வயதை உயர்த்திக் கொண்டே போனால் இந்த நாட்டின் சீதோஷ்ண நிலையின் காரணமாக, மொரால்டி கெட்டுவிடும் என்று பேரறிஞர்கள் சொல்கிறார்கள். எனவே அரசு இதைப் பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் உறுப்பினர் இப்போதுதான் பெண் பார்த்திருக்கிறார். ஆகவே அவசரப்படவேண்டாம்.

திரு. அ. தியாகராசன் : மேல்நாடுகளில் 40 வயது, 50 வயது ஆனபிறகுதான் ஆடவர்கள் திருமணம் செய்து கொள்கிறார்கள். அதனால் அவர்கள் நலமாகவும், திடகாத்திரமாகவும் நல்லமுறையில் இருக்கிறார்கள். அந்த முறையை நம்முடைய நாட்டிலும் கடைப் பிடிக்க அரசு யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மேல்நாடுகளில் 40, 50 வயதானபிறகுதான் திருமணம் செய்துகொள்கிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. ஒருவேளை அது இரண்டாவது திருமணமாகக்கூட இருக்கலாம்.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, சில இடங்களில் திருமணம் ஆகாமலேயே குழந்தைகள் பிறக்கின்றன. அதைத் தடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நல்லவர்களைப் பற்றித்தான் நாம் கவலைப்பட வேண்டும்.

வைகை அணை

*** 275 வினா—திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை வைகை அணைப்பகுதியில், மைசூர் பிருந்தாவனம் போன்று அமைப்பினை ஏற்படுத்துவதற்கு அரசு செயல் திட்டம் வகுத்துள்ளதா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) மைசூர் பிருந்தாவனத்தில் உள்ளதுபோல் பூங்காவும் தோட்டங்களும் முன்னரே வைகை அணைப்பகுதியில் இருக்கின்றன. மின்விளக்குகளை புதுப்பித்து தோட்டங்களுக்கும், பூங்காக்களுக்கும் அதிக ஒளியூட்டும் திட்டம் ஒன்று பரிசீலனையில் உள்ளது.

திரு. பெ. மலைச்சாமி : தலைவரவர்களே, தென் மாவட்டத்தில் வைகை டாம் பகுதியில் சுற்றுலா மாளிகை ஒன்றை அமைக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் இருப்பதாகக் கூறினார்கள். அதை விரைவு படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கே. சாதிக் பாட்சா : பின்தங்கிய வகுப்பு நல அமைச்சர் அவர்கள் வைகை அணைப்பகுதியில் ஏராளமான விளக்குகளைப் போட்டு, மைசூர் பிருந்தாவனத்தைப்போல் அழகுபடுத்தினால் உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் வகையில் இருக்கும் என்ற குறிப்பினை அனுப்பி

பிருக்கிருர். மதுரை மாவட்ட ஆட்சியாளரும் வைகை அணையில் உள்ள மின் விளக்கு அமைப்பைப் புதுப்பிப்பதற்காக ரூ. 2.14 லட்சத்திற்கு ஓர் மதிப்பீடு அனுப்பியுள்ளார். இத் திட்டம் பற்றி தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களுடன் தொடர்பு கொண்டு விரைவாக அவரது இறுதி அறிக்கையை அனுப்பும்படி அரசு கேட்டிருக்கிறது; வந்தவுடன் பரிசிலனை செய்யப்படும்.

* 276 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(a) whether there is a proposal to extend Vaigai Irrigation scheme in Madurai District including more areas in the system in Tirumangalam taluk; and

(b) if so, the steps taken in this regard?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த வைகைத் திட்டம் முதலிலே திருமங்கலம், உசிலம்பட்டி தாலுக்காக்களிலுள்ள பின் தங்கிய மக்கள் நிறைந்தப் பகுதி—மக்களுக்கும், உரப்பனூர் கண்மாய் மூலமாகவும், சாத்தூர் கண்மாய் மூலமாகவும் அவற்றையொட்டி இருக்கிற பகுதிகளுக்கும் தண்ணீர் விடுவது என்ற அடிப்படையிலே வகுக்கப்பட்டிருந்தாலும், பின் அவை விலக்கப்பட்டாலும்கூட, இப்போதாவது வைகைத் திட்டத்திலே இந்த இரண்டுத் திட்டங்களையும் செயல்படுத்த அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, திருமங்கலம் கால்வாயின் கீழ் 10,384 ஏக்கர் நிலப்பரப்புக்குப் பாசன வசதியளிக்க முதலில் திட்டமிடப்பட்டு, பூர்த்தி செய்யப்பட்டது. திருமங்கலம் கால்வாயில் சிமெண்ட் பூச்சு செய்யப்பட்டப் பிறகு அதிக பரப்பளவுக்கு திருமங்கலம் தாலுகாவில் 1,095 ஏக்கராவுக்கு நிலக்கோட்டை தாலுகாவில் 920 ஏக்கராவுக்கு ஆக மொத்தம் 2,015 ஏக்கராவுக்கு மட்டுமே பாசன வசதி அளிக்க முடிந்தது. சமீப காலமாக வைகைத் திட்டத்தின்கீழுள்ள ஆயக்கட்டு முழுமைக்கும் பாசன வசதியளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சில வருடங்களில் பாசனத்திற்குத் தண்ணீர் விடும் நாள் தள்ளி வைக்கப்பட்டது. மேலும் பயனடையும் ஆயக்கட்டும் குறைக்கப்பட்டுள்ளது. ஆகவே, இத் திட்டம் செயல்படும் விதத்தை இன்னும் சில ஆண்டுகள் பரிசிலனை செய்த பின்னர் விரிவுபடுத்துதல் குறித்து ஆலோசனை செய்யலாம்.

சித்திரைச்சாவடிக்கருகில் நொய்யலாற்றில் அணை

* 277 வினா—திரு. ஏ. சுப்பிரமணியம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நொய்யல் ஆற்றில் சித்திரைச்சாவடியில் கட்டப்பட்டுள்ள அணையின் உயரம் சில ஆண்டுகளுக்கு முன் கூடுதலாக்கப்பட்டது என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.